Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியை உள் நாடு

மலர் 31	ஹேவிளம்பி மாசி 1958 பிப்ரவரி	இதழ் 2

சமாஜத் தீர்மானங்கள்

[சென்னைத் திருமயிலையில் நிகழ்ந்த சைவசித்தாந்த மகா சமாஜத்தின் 52ஆம் ஆண்டு விழா—மகா நாட்டின் பேரவையில் நிறைவேற்றப்பெற்ற தீர்மானங்கள்.]

1. சில நாட்களுக்கு முன்பு, சில பிராமண சகோதரர்கள் காவிரியில் நீராடச் சென்றபோது அவர்களது சிகையையும் பூணூலையும் சில இந்து முரடர்கள் அறுக்க முயன்றார்கள் என்று கேள்வியுற்று, பெரிதும் அருவருக்கத்தக்கதும் பண்பாடற்றதுமான அச் செயலுக்காக வருந்தி, அதனை வன்மையாகக் கண்டிப்பதுடன், அத்தகைய பகைமைச் செயல்கள் வேறெங்கும் நேரவொட்டாதபடி காத்துக் கொள்ளுதற்கு இந்து சமுதாயத்தினர் யாவரும் ஒன்று சேர்ந்து ஆவன செய்யவேண்டும் என்று அவர்கள் அனைவரையும் இம் மாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

2. திருக்கோயில்களில் தெய்வ சாந்நித்தியம் விளங்கவும், துப்புரவு பொலியவும் அரசாங்கத்தினர் வகுத்து வெளியிட்டுள்ள ஏற்பாடுகளை இம் மாநாடு பாராட்டி நன்றி தெரிவித்துக் கொள்கின்றது.

3. சிவாலயங்களில் திருமுறைகளைப் பண்டைய முறையில் பாராயணம் செய்ய ஓதுவார்களுக்குப் பயிற்சி தந்து போதிய ஊதியம் அளித்து நியமிக்க வேண்டும் என்றும்; சமயப் பற்றும் கல்வியும் நல்லொழுக்கமும் உடைய தக்கவர்களைத் தேர்ந்தெடுத்துச் சமயப் பிரசாரகர்

களாகப் பணிசெய்தற்கு வேண்டிய பயிற்சி கொடுத்து நகரங்களிலும், சிற்றூர்களிலும், சேரிகள் முதலிய எளியோர் வாழுமிடங்களிலும் சமய உணர்வைப் பரப்புமாறு செய்யவேண்டும் என்றும்; அங்ஙனமே திருக்கோயில் அர்ச்சகர்களுக்கும் ஏற்ற பயிற்சி அளித்துப் போதிய ஊதியம் கிடைக்கச் செய்து, அவர்களின் கடமைகளைச் செம்மையாய்ப் புரிந்துவர ஊக்குவிக்கவேண்டும் என்றும் அரசாங்கத்தினரை இம் மாநாடு வேண்டிக் கொள்கின்றது.

4. இந்து மாணவர்களுக்குச் சமரச சமய போதனையும் நல்லொழுக்க போதனையும் பள்ளிகளில் நடைபெறுதற்கு வழி வகைகள் செய்ய வேண்டும் என்று அரசாங்கத்தினரை இம் மாநாடு வேண்டிக் கொள்ளுகின்றது.

5. தக்க அறிஞர்கள் சைவத் திருமுறைகளையும் சாத்திரங்களையும் பற்றி நடத்தும் வகுப்புகளுக்குச் சைவ இளைஞர்கள் சென்று சைவ மெய்ம்மைகளைக் கற்றுக் கொண்டு சமய உணர்வும் ஒழுக்கமும் உடையவர்களாகத் தாமும் திகழ்ந்து பிறரையும் திகழ்விக்க முயலுமாறு அவர்களை இம் மாநாடு வேண்டிக்கொள்கின்றது.

6. முற்காலத்தில் வாழ்ந்த மங்கையர்க்கரசியார் திலகவதியார் புனிதவதியார் முதலிய சிவநேயச் செல்வியர்கள்போல, இக் காலத்திலும் சமயத்தைப் பாதுகாக்கப் பெண்மணிகள் முன்வந்து, ஒவ்வொரு குடும்பத்திலும் சமய ஆசாரம் வழிபாடு முதலியவற்றைக் கைக்கொண்டு, குழந்தைகளைச் சமய உணர்வு சிறக்கும் வகையில் வளர்த்து வருவதோடு, சமுதாயத்தில் பக்தியையும் சமய ஞானத்தையும் பரவச் செய்து ஜீவகாருணிய சேவைபோன்ற பிற பொது நலத்துறைகளிலும் பங்குகொள்ளவும் வேண்டுமென அவர்களை இம் மாநாடு வேண்டிக் கொள்ளுகின்றது.

7. தமிழ் நாட்டில் மிகப் பெரிய சமய அமைப்பாக 50 ஆண்டுகட்கு மேலாகப் பணிபுரிந்து வரும் நமது சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்கண் சைவ நன்மக்கள் அனைவரும் உறுப்பினராதல் வேண்டும் என வற்புறுத்தி வேண்டிக் கொள்கின்றது.

8. இராமநாதபுரம் முதலிய பகுதிகளில் வகுப்பு வேற்றுமை காரணமாக இந்து சமயிகள் தமக்குள் கலகம்

விளைவித்துக்கொள்வது நம் சமய வளர்ச்சிக்கு இடையூறு கும். ஆதலால் வகுப்பு வேற்றுமைகளை மறந்து, சமய அடிப் படையில் எல்லோரும் ஒன்றுபட்டு வாழவேண்டும் என்று இம் மாநாடு நம் இந்து சமயிகள் எல்லோரையும் வேண்டிக் கொள்கின்றது.

9. பன்னிரு திருமுறைகளில் இருந்து எடுத்த வாசகங் களைக் கொண்டு சிவாலயங்களில் தமிழில் அர்ச்சனை செய்து கொள்ள விரும்பும் அன்பர்கட்கு வசதி செய்து தர வேண்டும் என்று திருக்கோயில் ஆட்சியாளர்களை இம் மாநாடு வேண்டிக் கொள்கின்றது.

10. ஓதுவார்கள் இல்லாச் சிவாலயங்களில் அக் கோயிலில் பூசை புரியும் சிவாச்சாரியார்களே பஞ்ச புராணங்களையும் பூசா காலங்களில் ஓதும்படி, அவர்களை யெல்லாம் இம் மாநாடு வேண்டிக் கொள்ளுகின்றது.

11. திருக்கோயில்களில் தேவாரத் திருமுறைகளை ஊர்ச் சிறுவர்கட்கும், பெண்பாலார்க்கும், யாவர்க்கும் ஓதக் கற்பிக்குமாறும் அவற்றை ஊரவர்க்கு ஒலி பரப்பு மாறும் திருக்கோயில் ஆட்சியாளர்களை இம் மாநாடு வேண்டிக் கொள்ளுகின்றது.

12. சமாஜத்திற்கு இடப் பரப்பும், அலுவலகமும், பூசை மண்டபம் முதலியனவும் அமைக்கும் வகையில் வேண்டிய பொருள் திரட்டுமாறு ஏற்பாடு செய்யவும், "திருநீற்றுத் தொண்டர் குழாம்" ஒன்றை அமைக்கவும், 1. திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, 2. திரு. நல். முருகேச முதலியார், 3. திரு. அ. சோமசுந்தரஞ் செட்டியார், 4. திரு. மறை. திருநாவுக்கரசு, 5. திரு. வா. தி. மாசிலாமணி முதலியார் என்பவர்கள் அடங்கிய குழு ஒன்றை இம் மாநாடு அமைக்கின்றது. வேண்டுமேல் மேலும் பிற தக்கவர்களைச் சேர்த்துக்கொள்ளும் உரிமையையும் இக் குழுவினர்க்கு இம் மாநாடு அளிக்கின்றது.

சமாஜ வரவேற்புரைகள்

1

[சென்னைத் திருமயிலாப்பூரில் 27, 28, 29–12–1957-ல் நிகழ்ந்த சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 52-ம் ஆண்டு விழாத் திறப்பாளர் - சென்னை அறநிலையப் பாதுகாப்பு அமைச்சர்-உயர்திரு. எம். பக்தவத்சலம் அவர்களுக்குச் சமாஜத்தினர் அளித்தது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தத்துவப் பேராசிரியர் - திரு. C. இராமலிங்கம், எம். எ., அவர்களால் இயற்றப்பெற்றது.]

தண்ணளி பூண்ட திங்கள் தன்னினும் செம்மை சேர்ந்த
மண்ணுளே சீரி தாய மாண்புகழ் வித்தும் சான்றோர்
எண்ணிலார் வாழ்தற் கேற்ற இடமிதே யென்று பல்லோர்
உண்ணிறை கருத்தே கொள்ளும் உயர்பெருந் தொண்டைநாடு. 1

சதகமும் பெற்ற நல்ல சால்பமை நாட்டு வாய்மை
இதமுடன் பேணி வாழ்ந்த ஏற்புடை வேளாண் சீர்த்தி
விதமுறு புகழே நாடி விளங்கிடு மேன்மை சான்ற
பதம்பெறு வாழ்வு பேணும் **பக்தவத் சலமே** வாழ்க. 2

சேக்கிழார் குடியில் தோன்றிச் சேக்கிழார் போன்றே இன்றும்
வாக்கமை யாற்ற லோடு வளமுடைச் சமயம் போற்றி
ஏக்கமை வளமும் பேணி யிருந்தர சியற்றும் பண்ப
ஆக்கமும் அரசுக் காற்றும் அருமைசால் திறமை சான்றாய். 3

இல்வளர் முல்லை போன்றே இயற்குணம் சிறக்கக் காத்துச்
செல்வநல் வாகை கண்டு சிறக்கவே பத்தாண் டாக
அல்லுடன் எல்லும் எண்ணு தாற்றுநல் லமைச்ச ராகப்
பல்துறைப் புலமும் பெற்ற பகலவன் அனையை வாழ்க. 4

அறுபது நிறைவு கண்டீர் அறுத்திடு பற்றை என்று
முறுகிடு மன்பின் சான்றோர் முன்னியே யுரைத்தார் [கண்டோம்
சிறுகுதந் நலத்தை நீக்கிச் சிறப்புடை நாட்டின் நலமே
நிறுவுதன் னலமே யென்ற நினைவுறு பண்பவாழ்க. 5

அறுபது வாழ்வும் நல்ல அரும்பணி வாழ்வும் நன்மை
நிறுவிடு சமய வாழ்வும் நிரம்பிய வளத்தோ டென்றும்
முறுகியே வளர்ந்து வாழ்க முருகனின் அடியே பேணி
இறுகிடும் அன்பால் வாழ்க என்றுமே வாழ்த்து வேமே. 6

2

[சென்னைத் திருமயிலாப்பூரில் 27, 28, 29-12-1957ல நிகழ்ந்த சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 52-ம் ஆண்டு நிறைவு விழாத் தலைவர் உயர்திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார், B.A., B.L. அவர்களுக்குச் சமாஜத்தினர் அளித்தது. யாத்தவர் : புலவர் முருகவேள், எம்.ஓ.எல்.]

செந்தமிழும் நல்ல சிவநெறியும் சீர்த்தோங்க
வந்தருள்எம் பாலசுப்ர மண்யநல்லோய் !—நந்தமுயர்
சென்னை மயிலைநிகழ் சீர்ச்சமாஜ ஆண்டுவிழா
நின்னிற் பொலிக ! நலம் நேர்ந்து. 1

மன்றமிகச் சைவசித் தாந்த மகாசமாஜம்
நன்றுநிலைத் தோங்க நயந்துழைத்தோய் !—நின்றன்
அரிய தலைமையில்இவ் ஆண்டுவிழாக் காணப்
பெரிதுமிக யாம்பெற்றேம் பேறு ! 2

தொழுதகைய நற்சான்றோய் ! தூய பெரியோய் !
பழுதில் ஒழுக்கம் படைத்தோய் !—முழுதுறழ
ஆங்கிலமும் தீந்தமிழும் ஆய்ந்துணர்வோய் ! நம்சமாஜம்
ஈங்குயரச் செய்தாய் இனிது ! 3

அல்லும் பகலும் அயரா துழைத்துமிக
வல்லாங்கு நம்சமாஜம் மாட்சியுறப்—பல்லாண்டு
நற்செவிலி போல்வளர்த்த நல்லோய் ! நின் தொண்டுகளைப்
பொற்புமிகப் போற்றுகின்றேம் யாம் ! 4

திருமுறைகள் சித்தாந்த சாத்திரங்கள் தேர்ந்தே
உரியமுறை நன்காய்ந் துணர்ந்தோய் !— அருமைமிகு
பாலசுப்ர மண்யநல்லோய் ! பண்பார்நம் சைவநெறி
சாலநன் றின்றோங்குமுறை சாற்று ! 5

நல்லார் திரு.வி.க., ஞானியார், 'யாழ்நூலார்',
கல்விவலார் ஆன்ற கதிரேசர்,—பல்வகைச்சீர்ச்
சச்சிதா னந்தர்முதற் சான்றோர்கள் போற்றுநின்சீர்
எச்சொல்லாற் கூறுகிற்பேம் யாம் ? 6

சீரியபல் பண்புடையோய்! செந்தமிழ்ச்சை வச்செல்வ!
ஆரியமாம் நன்மொழியும் ஆய்ந்துணர்வோய்!—நேரிதின்நீ
காசி,அல் காபாத் கலைக்கழகங் கள்சென்று
பேசியன மாட்சி பெரிது. 7

மிக்குயர்ந்த பேரறிஞ! மேதகையோய்! சைவமொடு
தக்கமுறை வைணவமும் தான்போற்றும்—நற்குணத்தோய்!
நாலா யிரப்பனுவல் நன்கு பதிப்பித்த
சீலா!நீ வாழ்க! சிறந்து. 8

கீழைகிழார் தெய்வ சிகாமணியார் கேட்டபடி
வாழி அவர்தம் மணிவிழவில்—ஆழமிக
நன்றுநீர் ஆற்றிய “நான் நம்புவன” என்னுமுரை
இன்றும் சுவைக்கின்றோம் யாம். 9

வண்தில்லைக் கோடை வகுப்பினில்நீர் “எச்சம்” எனும்
ஒண்குறட் சொல்லுக் குரைவிரித்த—திண்டிறமும்,
பல்வே(று) *“இயல்பூக்கள்” பற்றி விளக்கியதும்
சொல்வதெங்ஙன்? எம்உணர்வாற் சூழ்ந்து! 10

தொன்மைமிகும் நம்அருமைத் தூயதமிழ்ச் சைவநெறி
மன்னும் மறுமலர்ச்சி வாய்ந்தொளிர—நன்முறையில்
தொண்டு பெரிதாற்றும் தூயோய்!நின் நற்றலைமை
கண்டுமகிழ் கின்றோம் களித்து! 11

‘சென்றகன்ற காலத்தின் சீர்த்தியும், மற்றினித்தான்
நன்கெதிரும் காலத்தின் நன்மைகளும்’—இன்றுநீர்
ஆற்றும் தலைமையுரை ஆக்கிஎமக் கீந்தருளப்
போற்றுகின்றோம்! ஆர்வம் பொலிந்து. 12

மயிலைகிழார், மாதவ தாசர்,மாண் பெல்லாம்
பயிலஒளிர் பாலசுப்ர மண்யர்,—செயல்அமைதி
ஆர்ந்த இளமுருகர் என்றன்பால் யாங்களெலாம்
தேர்ந்தழைப்ப வாழியர்!நீர் சேர்த்து.

*Instincts.

3

[சென்னைத் திருமயிலாப்பூரில்' 27, 28, 29–12–1957ல் நிகழ்ந்த சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 52-ம் ஆண்டு நிறைவு விழாவில், சைவ இளைஞர் மாநாட்டுத் தலைவர் - உயர்திரு. ச. சிவ குமாரன், M.A., அவர்களுக்குச் சமாஜத்தினர் அளித்தது. யாத்தவர் : புலவர் முருகவேள், எம்.ஓ.எல்,]

அன்பினிற் சிறந்த நல்லோய்! அறிவின்நல் வடிவம் போல்வாய்!, நன்றுயர் பண்பின் மிக்கோய்! நற்றமிழ்ச் சைவத் தோன்றல்!, தன்பெருந் தவத்தாற் சான்றோர்சச்சிதானந்தர் பெற்ற, இன்புயர் புதல்வ! எங்கள் எழிற்சிவ குமர மேலோய்! 1

அகத்தியல் அறிவின் ஆற்றல் அன்பருள் நலங்கள் வாய்ந்தோய்!, செகத்தினில் இணையொன் றில்லாத் திருத்தொண்டர் புராணம் நன்றே, மிகத்தெளி வாக ஆய்ந்து மேதக விளக்க வல்லாய்!, தகப்பல ஆண்டாச் சைவம் தமிழிவை வளர்த்துக் காப்பாய்! 2

அருந்தமிழ்த் திங்கள்! சைவ அருளிள ஞாயி(று)! ஓங்கும், பெருங்கலைப் பொதியம்! நுண்மைப் பேருணர் வருவி! தூய, நறும்பல பண்பின் சோலை! நல்லுரைத் தென்றல்! என்னும், திறம்பல செறிந்த எங்கள் சீர்ச்சிவ குமரச் செம்மால்! 3

“வாழ்வெனும் மையல் விட்டு வறுமையாம் சிறுமை தப்பித், தாழ்வெனும் தன்மை யோடு சைவமாம் சமயம் சாரும், ஊழ்பெறல் அரிய தென்பர்” உயர்சிவ குமர! நின் போற், சூழ்வுறிற் சிவந லங்கள் துன்றினோர் சிலரே யாவர்! 4

உயர்நிலைப் பதவி பெற்றும், உறுபல வசதி வாய்த்தும், செயலகக் கடமை மிக்குச் செறிந்துநின் றிருந்தும், சைவ இயலமை பணிகள் செய்யும் எழிற்சிவ குமர! நின்றன் பயிலுதற் கினிய நல்ல பண்பெலாம் பகர்தல் எங்ஙன்? 5

உண்மைப் பெரியார்! ஒழுக்கமிக்கார்! உயர்ந்த குறிக்கோள் வாழ்க்கையினர்!, திண்மைச் சைவப் பற்றுடையார்! சிறந்த சச்சி தானந்தர், வண்மைத் தவத்தால் வந்துதித்

தோய் ! மாட்சி பலதாம் வாய்த்தொளிர்வோய்!, தண்மைப் பண்பார்.சிவகுமர! தக்கோய் ! நின்சீர் சாற்றரிதால் ! 6

அரிய தமிழோ(டு) ஆங்கிலமும் ஆய்ந்து தெளிந்த உணர்வுடையோய் !, மருவு பழமை புதுமையெலாம் வாய்ப்பப் போற்றும் மதிநலத்தோய்!, உரிய முறையில் இளைஞர் உளம் உணர வல்லோய் ! நின்தலைமை, பெரிதும் மிகவும் பொருந்துவதாம் இளைஞர் நலங்கள் பெருகுதற்கே ! 7

கேட்டார்ப் பிணிக்கும் தகையனவாய்க் கேளார் தாமும் பெரிதுமிக, வேட்டு நிற்ப விரிவுரைகள் மிகநன்ருற்று சிவகுமர!, மாட்சி ஓங்கும் நற்சைவ இளைஞர் மாநாட்டின் தலைமை, காட்சி ஓங்க நீஏற்றுக் கவின நடாத்தித் தருக நன்றே ! 8

எல்லை இல்லாச் சிறப்புடைய இனிய சைவ சித்தாந்த, நல்ல கொள்கை நனிபரப்பி நன்றைம் பதின்மேல் ஆண்டுகளாய், ஒல்லும் அளவும் பணிசெய்நம் உயர்ந்த சமாஜத்திற்சைவச், செல்வ இளைஞர் மாநாட்டின் சிறந்த தலைவ!வருக நன்றே! 9

வருக! வருக! என்றுநினை வரவேற் றன்பு மீக்கூரப், பெருகும் மகிழ்ச்சி மிக்கோங்கப் பேணி உவந்தே போற்றுகின்ரும்!, அரிதின் நிகழ்நம் சமாஜத்தின் ஆண்டு விழாவில், இளைஞர்கள்தம், உரிய தலைவர் என அமர்ந்துன் உயர்தொண்டாற்றி வாழியவே ! 10

பெண்மணித் தொண்டர்கள்*

பேரன்புமிக்க தலைவர் அவர்களே ! பெரியோர்களே ! இன்று என்னைப் பேசப் பணித்த பொருள் பெண்மணித் தொண்டர்கள் என்பதாகும். முதலில் பெண் என்னும்

---

*சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 52-ம் ஆண்டு நிறைவு விழா மாதர் மாநாட்டில் திரு. கற்பகவல்லி சோமசுந்தரம் அவர்கள் பேசியது.

சொல்லைச் சிறிது ஆராய்வோம். பெண் உறுப்புடையது பெண் என்று சொல்வது சாதாரண உலக வழக்கு. பெண்ணுறுப்புடைய சிலரிடத்திலும் சிலவற்றிலும் பெண்மை இல்லாதிருத்தல் கண்கூடு. ஆதலின் உறுப்புக்குறி ஒன்றையே கருதிப் பெண் இஃது என்று கொள்ளல் முறைமையாகாது. உறுப்போடு பல இயல்புகளையும் கொண்ட ஒன்றே பெண் என்பது, அவ்வியல்புகளின் திரட்சி பெண்மை எனப்படும். இப் பெண்மையுடையது பெண் ஆகும். பெண்மை எனுஞ் சொல், கடை குறைந்து, பெண்ணென நின்று, பின்னைப் பெண்ணெனும் ஓர் இனத்தைக் குறிப்பதாயிற்று. பெண் ஆகுபெயர், இது தமிழ் இலக்கண வழக்கு. பெண்மையாவது யாது எனின் அடக்கம், பொறுமை, தியாகம், அமைதி, இரக்கம், அழகு, ஒப்புரவு, தொண்டு முதலியன அமைந்த ஒன்று பெண்மை எனப்படும். மண், நீர், காற்று, ஒளி முதலியன சேர்ந்து மரமாதல் போல, சிறுசிறு நீர்த்துளிகள் கலந்து பரந்த நீர் நிலை என்று பெயர் பெறுதல்போல, சிறுசிறு பரல்கள் கலந்து மலை என்ற பெயர் பெறுதல்போல, அடக்கம் முதலிய குணங்கள் ஒன்றி, அவை பெண்மை என்னும் பெயர் பெற்றன. பெண்மை என்பதைக் கூறிட்டுப் பார்ப்பின், அஃது அடக்கம், முதலிய நீர்மைகளாகப் பிரிந்து நிற்கும். ஆகவே அடக்கம் முதலிய இயல்புகளின் திரட்சி பெண்மையாகிறது.

அடுத்தபடியாக, தொண்டு என்பதை எடுத்துக்கொள்வோம். தொண்டு செய்வோர் தொண்டர் எனப்படுவர். தொண்டர்களின் இயல்புகளனைத்தையும் பெண் தன்னகத்தே கொண்டுள்ளாள். தொண்டு எனப்படுவது தந்நலம் கருதாது பிறர்நலம் பேணுதல். இவ்வாறு பிறர்நலம் பேணும் பண்பாடு சிறப்பாக மகளிர்க்கே உரித்து எனல் மிகையாகாது. குழவிப் பருவம் நீங்கிப் பள்ளிக்குச் செல்லும் பருவத்திலிருந்தே பெண்களின் தொண்டு தொடங்குகிறது. பள்ளிக்கேகும் நேரம் தவிர மற்ற நேரங்களில் தாய்க்கு அவள் வேலையில் உதவுமுகத்தான் ஆற்றுந் தொண்டிலிருந்து, கணவனுக்கு ஆற்றும் தொண்டு, பிள்ளைகளுக்கு ஆற்றும் தொண்டு, விருந்தினர்க்கு ஆற்றும் தொண்டு, சுற்றத்தார்க்கு ஆற்றும் தொண்டு, பிறகு சமூ

கத்திற்கே ஆற்றும் தொண்டு என மகளிர் ஆற்றும் தொண்டுகள் பல.

பிள்ளைகளை நல்வழியில் வளர்க்கும் தொண்டினுஞ் சிறந்தது வேறு ஒன்றுண்டோ? உலகநலன் ஒன்றே கருதித் தாய் தொண்டு செய்கிறாள். பயன் கருதாத் தொண்டன்றோ கடவுள் தொண்டு. இது பற்றியே "ஈன்றாளின் என்ன கடவுளுமில்" என்றது நான்மணிக்கடிகை. பெண் தாயாய்ப் புரியுந் தொண்டு பெரிதுங் கருதற்பாலது. பெண் பிறவியின் விழுமிய நோக்கம் தாயாகித் தொண்டு புரிதல் என்று சொல்லல் மிகையாகாது. "பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து" என்கிறார் மாணிக்கவாசகர். தொண்டிற்கென்றே பெண் பிறந்தாள், வளர்ந்தாள், படித்தாள், மணங்கொண்டாள், வாழ்கிறாள் என்றும் கூறலாம். தன் கணவன் குணத்திற்கு ஏற்ப, குடும்பச் சூழ்நிலைக்கு ஏற்ப, சுற்றத்தார்க்கு ஏற்பப் பெண் தொண்டாற்றிப் பெருமையுறுகிறாள். தாய் பிள்ளையை வளர்க்கப் புகுங்கால் அவள் உள்ளத்தில் இறைமைக்குரிய நீர்மைகளெல்லாம் பதிகின்றன. தொண்டு, தியாகம், தன்னல மறுப்பு முதலியன அவள்மாட்டு அரும்புகின்றன. தாய் கைம்மாறு கருதிக் குழந்தைக்குத் தொண்டு செய்வது இல்லை. தனக்குள்ள எல்லாவற்றையும், சமயம்வரின் உயிரையும் பிள்ளை நலத்துக்குக் கொடுக்கத் தாய் விரைந்து நிற்கிறாள். பயன் கருதாத் தொண்டு, தியாகம், தன்னல மறுப்பு முதலியன சேர்ந்த ஒன்றே தாய்மை எனப்படும். இந் நீர்மைகள் உள்ள இடத்தில் பொறாமை, அவா முதலியன இரும்புண்ட நீர் போல ஒடுங்கிப்போகும். இந்நிலைபெற்ற தாயின் உள்ளத்தில் அன்பே நிலைத்திருக்கும். பொய், பொறாமை கடந்த அன்பே தாய்மையாதலின் தாய்மை இறைமையாகிறது. "ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ" என்றார் அப்பர். "தாயேயாகி வளர்த்தனை போற்றி" என்கிறார் மாணிக்கவாசகர். இத்தகைய மாட்சி பெற்ற பெண் இனத்தை வள்ளுவர் "பெண்ணிற் பெருந்தக்க யாவுள" என்கிறார்.

அடுத்தபடியாக, சமூகத் தொண்டிலும் ஈடுபட்ட பெண்மணிகள் பலராவர். மேல்நாட்டு க்யூரி அம்மையார் வாழ்நாள் தோறும் தொண்டாற்றி ரேடியத்தைக் கண்டு பிடித்தார். சாந்த்பீபி, ஜான்ஸிராணி, துர்காபாய் இவர்கள்

தம் உயிரைப் பொருட்படுத்தாது நாட்டுக்குத் தொண்டாற்றி உயிர் நீத்தனர். ஹெலன் கெல்லர் என்னும் மேனாட்டு அம்மையார் தன்னைப்போன்று கண், செவி, நாக்கு இவற்றின் தன்மை இழந்த மக்கட்குத் தனிப்பட்ட முறையில் பள்ளிகளை ஏற்படுத்தித் தொண்டாற்றுகிறார். நம் நாட்டின் விடுதலைக்குத் தொண்டாற்றிய பலருள் மேனாட்டு அம்மையார் அன்னிபெசன்ட் அம்மையாரும் ஒருவர். ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலையில், மணிமேகலை இளமையில் துறவு பூண்டு உலக இன்பத்தை வெறுத்து, அமுத சுரபி பெற்று, ஏழை எளியவர்க்கு உணவளித்து, தொண்டாற்றி, இறைவழிபாடு செய்து இறுதியில் பெரும் புகழ் எய்தினள் என்ற வரலாற்றைக் கூர்ந்து நோக்குக. நந் தமிழ்நாட்டு மூதாட்டியாராகிய ஔவையார் ஆற்றியுள்ள அரும்பெரும் தொண்டு நம் அனைவருக்கும் தெரிந்ததே.

முன் குறிப்பிட்ட தொண்டுகள் அனைத்திற்கும் தலையாய தொண்டு இறைவழிபாடே. இதை அருணகிரியாரும் தாம் இயற்றிய கந்தர் அனுபூதி முதல் பாட்டில் "ஆடும்பரி வேல் அணிசேவல் எனப் பாடும் பணியே பணியாய் அருள்வாய்" என்று இறை வழிபாட்டையே தனக்குப் பணியாக அருள் செய்யுமாறு இறைவனை வேண்டுகிறார். அவரே தன் கந்தர் அலங்காரத்தில் "மைவரும் கண்டத்தார் மைந்த, கந்தா என்று வாழ்த்தும் இக்கைவரும் தொண்டன்றி மற்று அறியேன்" என முறையிடுகின்றார். இத்தகைய இறைவழிபாட்டில் ஈடுபட்டுத் தொண்டாற்றி, மக்களை உய்வித்து, அழியா இன்ப வீடு எய்திய பெண்மணிகள் நம் தமிழ் நாட்டிற் பலர். அவர்களுள் குறிப்பாக நம் சைவ சமயத்தைச் சார்ந்தவர்கள் மங்கையர்க்கரசியார், திலகவதியார், காரைக்காலம்மையார் ஆவார்கள். வைணவ சமயத்தில் ஆண்டாள் அம்மையார் ஆவார்கள்.

இவர்களுள் முதலில் மங்கையர்க்கரசி அம்மையாரை எடுத்துக் கொள்ளுவோம். பாண்டிமா நாட்டில் ஒருபோது சமணசமயம் பெருகிச் சைவசமயம் அருகிற்று. அக்காலத்தில் மன்னனும் அச் சமணநெறி நின்றான். "அரசன் எவ்வழி அவ்வழி குடிகள்" என்றபடி குடிமக்கள் பலரும்

அமண் சமயம் புகுந்தனர். சொக்கலிங்கத்தையும் மீனாட்சியையும் தொழுவோர் அரியராயினர். இந் நிலையில் அவ்விடத்தில் சைவசமயம் தழைக்க உழைத்துத் தொண்டாற்றிய பெருமாட்டி மங்கையர்க்கரசியார் ஆவர். சமண சமயத்தைச் சார்ந்த பாண்டியனின் தேவியார், நாயகன் வேறு சமயம் புகுந்தும், நாடு வேறு சமயம் புகுந்தும், தனதறிவிற்குப் பொருத்தமெனத் தோன்றிய ஒரு கொள்கையினின்றும் நாயகன் பொருட்டாதல், நாட்டின் பொருட்டாதல் சிறிதும் பிறழாது உறுதியில் நின்றார். அவ்வளவோடு நில்லாது, சைவசமயம் தழைத்தோங்கற் பொருட்டு, திருஞானசம்பந்தரைத் தனது நாட்டிற்கு வரவழைத்து, மீண்டும் நாயகனையும் நாட்டையும் சைவ சமயத்தினராக்கினார் எனின், அவரது சமயப்பற்றும், அவரது சமய தொண்டும் என்னென்பது! கணவனின் சமயத்திற்கு மாறுபடினும் ஏனையவகையில் கருத்தொருமித்து இல்லறத்தை இனிது நடாத்தி, நாடு நலம் பெற இனிய முறையில் தொண்டு ஆற்றியவர் மங்கையர்க்கரசியாவர். இதனாலன்றோ சேக்கிழார் அவர்களும் " மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம் " என்று விதந்து கூறியுள்ளார். இறைவனைத் தவிர ஏனையோரைப் பாடாத திருஞான சம்பந்தரும், " மங்கையர்க்கரசி வளவர் கோன் பாவை " என்று அம்மையாரின் சிறப்பைத் தன் தேவாரத்தில் வைத்துப் பாடியுள்ளார். மங்கையர்க்கரசியார் என்ற பெண்மணி தமிழ் நாட்டில் அன்று இல்லையேல், அன்றே சைவசமயம் இறந்துபட்டிருக்கும். எனவே அவ்வம்மையாரின் தொண்டைச் சைவ உலகம் போற்றாமலிருப்பதற்கில்லை.

அடுத்தபடியாக, திலகவதியார் தனக்குப் பெற்றோரால் நிச்சயிக்கப்பட்ட மணாளன் போரில் இறந்துபட்டார் எனச் செவிமடுத்ததிலிருந்து தனக்கு மணமே வேண்டாம் என மறுத்து, தன் வாழ் நாட்களை இறைவன்பால் தொண்டாற்றலில் செலவழித்து வந்தார். திருவலகிடுதல், திருமெழுகிடுதல், பூத்தொடுத்தல் முதலிய திரு ஆலயத்தொண்டைத் திருவதிகை வீரட்டானத்தில் ஆற்றி வந்தார்கள். தமது அருமைத் தம்பி திருநாவுக்கரசர் சமண சமயத்திலீடுபட்டு வாணாளை வீணே கழிப்பதைக் கேட்டு வருந்தி இறை

வனிடம் வேண்டினார். இறைவனின் மறக் கருணையால் தம்பிக்குக் கொடிய சூலைநோய் கண்டது. சூலைநோயை அமணரால் போக்க முடியவில்லை. பிறகு தமக்கையின் கட்டளைப்படி பாடலிபுரத்தினின்றும் திருவதிகை போந்து வீரட்டானேசுவரனைக் "கூற்றாயினவாறு விலக்ககிலீர்..." என்னும் பாடலை முதலாகக்கொண்ட திருப்பதிகம் பாடிச் சூலைநோய் நீங்கப் பெற்றார். சமண சமயத்தினின்றும் மறுபடியும் சைவ சமயத்திற் புக்கு, அவர் பாடிய தேவாரத் திருத்தாண்டகப் பாடல்கள் பல. அவருக்கு இறைவனால் "திருநாவுக்கரசு", என்னும் பட்டம் சூட்டப் பெற்றது. "திருநாவுக்கரசு" என்று இறைவனே அருளிச் செய்த சிறப்பிற்குக் காரணம் அவர் பாடிய செந்தமிழ்த் தொடை. அச் செந்தமிழ்த் தொடையைப் பாடுவதற்குக் காரணம் சூலைநோய். அந் நோயை அருளுதற்குக் காரணம் அம்மையாரின் இடைவிடா முறையீடாகும். ஆகவே திருவதிகை போந்ததும், இறைவன் முன் சென்றதும், பாமாலை தொடுத்ததும், நாவரசர் என்ற நாமம் பெற்றதும் அம்மையாரின் திருத்தொண்டே யாகும். பெற்றோரால் தம் திருமணத்திற்கு நிச்சயிக்கப்பட்டவர் இறந்துபட்டார் என அறிந்தவுடன் உலக இன்பத்தைத் துறந்து இறைபணியில் வாழ்நாள் முழுவதும் ஈடுபட்டு, தம் தம்பியை உய்வித்து, நமக்கும் உய்ய வழிகாட்டிய திலகவதியாரின் தொண்டின் பெருமையை என்னென்பது.

மூன்றாவதாகப் புனிதவதியார், வள்ளுவர் குறளுக்கு இலக்காகத் தற்காத்துத் தற்கொண்டான் பேணி, இல்லறம் நடாத்திப் பின் இறை தொண்டாற்றினார். கணவனுக்குத் தொண்டாற்றி, இல்லறம் நடாத்தி இறைவனைக் காணப் பேயுருக்கொண்டு செல்கிறார். கயிலாயமலையில்வீற்றிருக்கும் அம்மையப்பனைக் காணப் பேயுருக்கொண்டு, தலையாலே நடந்து இறைவனைக் காண்கிறார். இறைவன் அம்மையாரைக் கண்டு, "அம்மையே" என விளிக்க, புனிதவதியார் "அப்பா" எனப் பங்கயச் செம் பொற்பாதம் பணிந்து, வீழ்ந்து எழுந்தார். இறைவன், "நம்பால் இங்கு வேண்டுவதென்" என வினவினார். அம்மையார்,

"இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்

மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவா, நீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க " என்றார்.

இறைவனும் அதற்கருள் செய்து "திருவாலங்காட்டில் ஆடும் மாநடனத்தை நீ கண்டு ஆனந்தம் சேர்ந்தெப் போதும் பாடுவாய் நம்மை" எனப் பகர்ந்தார். வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து, இறை தொண்டாற்றிய புனித வதியார் தொண்டின் பெருமை போற்றற்குரியது.

திரு ஆண்டாள் உலக இன்பத்தில் பற்றில்லாமல் இறைவனையே நினைந்து நினைந்து, மணாளனாகக்கொண்டு திருப்பாவை முதலிய பாடல்கள் மூலம் தொண்டாற்றி நாம் உய்ய வழி தேடித் தந்துள்ளார். மேற்கூறிய தொண்டர்கள் வழி நின்று, சைவநெறி தழைத்தோங்கத் தொண்டாற்றி நாம் உய்வோமாக.

எவன் தலைவன் ?

அ. தா. ப. திருஞானசம்பந்தன்

இஃதோர் ஆய்தற்குரிய தலைப்பு. "உலக மக்களில் பெரும்பாலோர் தலைவன் யார்? அவன்தான் அன்புரு வினன்" என்று அறிந்து கொள்ளவில்லை என்று இங்கர் சால் என்ற அமெரிக்க மெய்ஞ்ஞானி புகல்கின்றார். வீர முள்ள பேச்சு, நெஞ்சுரம் பெறாத சொற்கள், நுண்மாண் நுழைபுலமற்ற கூர்மை மழுங்கிய நோக்கு, மக்களை மயக் கும் மதுரசம் போன்ற பறையோசை அன்ன சொற்கள் பூண்டவனை மக்கள் தன்னேரில்லாத் தலைவன் என்று போற்றுகின்றனர். தலைவன் தன்னைப் பற்றிய எல்லாம் முதலில் செவ்வனே அமைத்துக் கொள்ளவேண்டும். வாய்ச் சொல் வீரர் வாழ்நாள் வற்றிப்போன ஊற்றிற்குச் சமம். வற்றாத ஊற்று மணற்கேணி, மணற்கேணியை நிகர்த்தவர் வீறுபாடுடைய சான்றோர். சொல்லும் செயலும் ஒருங் குடையார் வாழ்க்கை பரிணமிக்கின்றது. வாழ்க்கையின் தலையாய தத்துவங்கள் யாரால் ஆக்கப்பெறுகின்றன? எண்ணியபடி எழுத்திலும், பேச்சிலும், திகழ்பவனால் ஆக்கப் பெறுகின்றது. எண்ணிய எண்ணங்கள் ஈடேறவேண்டும் என்று எண்ணுகின்றவன் எளிய வாழ்க்கை வாழ்கின்ற

வனாக இருக்கவேண்டும் என்னும் எண்ணங்கள் உயர்வுடையனவாக இருக்கவேண்டும். "உள்ளிய தெல்லாம் உடனெய்தல்" என்பது வள்ளுவரின் கருத்தமைந்த சொல்லோவியம். சிறந்த தலைவனுக்கு அடங்கும் குணமும், கோபமற்ற செயலும் இருக்கவேண்டும். முற்றிலும் கோபம் அற்றவனாகவும் இருக்கக் கூடாது. தலைவன் என்று வெளி வருபவனுக்கு நேருகின்ற துன்பங்களுக்கோர் எல்லையில்லை. துன்பத்தின் இறுதியே இன்பத்தின் பிறப்பிடம். இன்பத்தின் முடிந்த எல்லையே அமைதி. அமைதி என்ற அரியணையே தலைவனின் வீற்றிருக்கை. சினத்தை நீக்கிய தலைவன் தான் எண்ணிய நலங்களையும் ஒருமிக்கப் பெறுவான். கோபமற்றவன் மனத்தில் அருள் நிற்கின்றது. அம் மனத்தால் நினைக்கப் பெற்றவை யெல்லாம் கைகூடும் என்பது உலகவர் அறியவேண்டியதோர் உண்மை. அருள் பெற்றோரை வணங்குதல் இறைவனை வணங்குவதற்குச் சமம். அருள் பெற்றானை வணங்குகின்ற பொழுது, கரங் கூப்பி வணங்கவேண்டும். எல்லாரையும் கண்டு வணங்குகின்றதுபோல அவனை வணங்குதல் தகாது. "கரங்குவி வாருண்மகிழும் கோன் கழல்கள் வெல்க" என்பது மணிமொழி. கரங்குவித்து, அருள் பெற்றானையோ, அன்றி அருள் பாலித்தற்கு உரியானையோ வணங்கினால் "தன்னேரில்லாத் தலைவன்" மகிழ்ந்து வணங்குகின்றவன் உள்ளத்தில் உள்ளொளி பரப்பி இன்ப நட்டம் பயின்று புரிவான் என்பது எம்மனோர் கருத்து.

உள்ளிய எல்லா முடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின். (குறள் - அறம்)

கொழுத்த செல்வத்தையும், புயவலி நிரம்பப் பெற்றவர்களையும் தன்பால் கொண்டு, அளவற்ற அடக்குமுறைகள் செய்து, ஆரவாரத்தின் அடிமையிலே நின்று, தான் இன்னது செய்கின்றோம் என்றறியாது, தலைவிரிகோலத்துடன் ஆட்சி செய்கின்றவன் ஆளுந் தலைவன் அல்ல. அவனால் பெறுகின்ற இன்பம் எத்தகையது எனின், அரிமா வாழ்கின்ற காட்டில், பயந்து ஒடுங்கிப் பதுங்கும் ஆட்டுக்குட்டிகள் வாழ்வதற்கு ஒப்பாகும். எவ்வளவு உயர்ந்த வாழ்க்கை வாழ்ந்தாலும் மண்ணவள் நம்மை ஒரு

நாள் மனமார அழைத்து மகிழ்வாள் என்ற எண்ணம் என்புகள் தோறும் நிறையப் பெறுதவன் தலைவன் என்று சொல்லித் தலைநிமிர்ந்து வாழ வையகத்தில் வளமான இடமில்லை.

இன்மொழிகள் இலகுவில் நிறைந்து, படிறற்ற கருத்துக்கள் பரம்பரையாய் அமைந்து எவ்வமில் சொற்கள் எழிலுடன் ஒருங்கமைந்து, நித்தலும், நியாயத்தை நியதியாகப் புரிகின்றவன் தலைவனாக இருத்தற்குரியன். அவன் சொற்கள் எல்லாரையும் பிணிக்கும். சொல்லப்படும் காரியங்களை ஒழுங்காக இசைத்து, இனிமையாக அளிக்க வல்லாரை, அடையப் பெற்றால் உலகம் அச் சொற்களை விரைந்து செவிமடுக்கும் என்பது உலகப் புலவனின் உயர்வாக்கு.

விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின். (குறள் - பொருள்)

அளவுக்கு மிஞ்சிய ஆடம்பர வாழ்க்கையில் ஈடுபடுகின்றவன் ஆட்சி அவலமாய் முடியும். எளிய உணவு உண்டு, எளிய ஆடை அணிந்து, எளிய வாழ்வில் உயர்ந்த எண்ணங்களும், சிறந்த செயல்களும் பூண்டு விளங்குகின்றவன் ஆட்சி பெருமிதத்திற்கு உரிய ஒன்றாய்த் திகழும். வலியார் வருத்தத்தைத் தாங்கமாட்டாமல் அவ்வருத்தத்தைப் போக்கிக்கொள்ள முடியாமல் வந்தடைந்தவர்களும், வறுமைப் பிணி, வன்மையாக வாட்ட, அதைத் தாங்க முடியாமல் அடைக்கலம் என்றடைந்தோர்களுக்கும், வாழ வழியின்றித் தியங்கிக் கைகால் முடங்கிக் கிடந்து, வந்தடைந்தோர்களுக்கும் தன்னைக் கண்டவுடனே வேண்டுவன கொடுத்து எவரிடத்தும் கொடுமொழி பேசாமல் நற்சொற்கள் விளம்பி எழிலுறு வாழ்க்கையை வாழ்கின்றவன் தலைவனாதற்குரியன்.

காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேல்
மீக்கூறு மன்ன னிலம். (குறள் - பொருள்)

மாற்றானைக் கண்டு மனம் தளரப் பெறாமல் இருப்பவன் தலைவன்; கொடைக் குணமும், பேரறிவும் வாய்க்கப் பெற்றவன் தலைவன்; உள்ளத்தே உயர்வுடைய எண்ணங்களை எழுப்பிக்கொள்கின்றவன் தலைவன்; உற்றவிடத்திற்கு

உதவும் உறவினன் என்று பாராமலும், மாற்றான் போர்க்களத்தில் படுதோல்வி விளைவிக்க வேண்டும் என்று புற்றில் காணும் பாம்பும் நடுங்கும் படையுடனே புறப்பட்டு வருகின்றதைக் கண்டு அஞ்சி அலைச்சலுறாமலும், பொது மக்களின் போக்கைக் கண்டு, அதன்வழித் தானும் செயலாற்றி, நல்வழி செல்கின்றவன் தலைவன். நீதி வழுவா நெறிமுறை யறிந்து, உயர்ந்த பண்பும், ஒளிர்ந்த அறிவும், செறிந்த அன்பும் கொண்டு திகழ்பவனையே, உலகம் தலைவன்' என்றழைக்கின்றது. நல்லரசனைக் காண்கின்ற பொழுது திருமாலைக் காண்பதாகவே சான்றோர் கருதுகின்றார்கள். அவனே சிறந்த தலைவன்.

அரும்புள்ளம் விரை நீக்கி, மலர்ந்த மலர்கள் தூவி, மாமனத்தைக் கூப்பி, கரங்களைச் சென்னிமேல் அமைத்து, அவனுடன் கலந்திருந்து கண்ணீர் அரும்பிக் கசிவார்க்கு, எளியனாக நின்று காட்சியளிப்பன் கங்கையை முடிமேல் அணிந்த முழுமுதற்றலைவன். "யானே பொய், என் நெஞ்சும் பொய், என் அன்பும் பொய், ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே!" என்பது திருவாசகம்.

மலர்ந்த மலர்தூவி மாமனத்தைக் கூப்பிப்
புலர்ந்தும் புலராத போதும்—கலந்திருந்து
கண்ணீர் அரும்பக் கசிவார்க்குக் காண்பெளியன்
தெண்ணீர் சடைகரந்த தேவு. (பதினோராந் திருமுறை)

தலைவனைப் பெறுகின்ற தன்மையை ஒருவாறு நாம் அறிந்தோம். அந்தத் தலைவன் உள்ள இடம் எது? அவன் எத்தன்மையன் என்பது பற்றி அறியவேண்டுமல்லவா? இந்தத் தலைவன் பேசாத மோன நிலையில் இருந்து, உயர்ந்த தத்துவங்களை விளக்கி அருள் பாலிப்பவனாவன். பாற்கடலில் பள்ளி கொள்ளும் பரந்தாமனும், படைக்கும் தொழிலையே தன் பணியெனக் கண்டு திகழும் நான்முகனும் உணரமுடியாத நிலையில் அழலுருவான தலைவன்; பிறவாதே தோன்றி, பார்ப்போர் புறக்கண்களுக்குத் தோன்றாமல் அகக்கண்களுக்குத் தோற்ற முறுபவன் தலைவன்; வேதங்களெல்லாம் ஆழ்ந்து பார்க்க

முடியாமல் அதற்கும் ஆழ்ந்து நிற்பவன் தலைவன்; ஊழால் வலியுறுத்தப்படாதவன் தலைவன்; ஒளி நிறைந்த நூல்கள் அனைத்தும் ஓதாதுணரப் பெற்றவன் நம் தலைவன்; இயற்கை அறிவின் தோற்றமே நம் தலைவன்; அவன் திருமாலாக நின்று காப்பான்; பிரமனாக நின்று உலகைப் படைப்பான்; அரனாக நின்று உலகை அழிப்பான். தேவர்களாலும் அறிய முடியாத தோற்றத்தன் பிறப்பறுக்கும் பிஞ்ஞகனான நம் தலைவன்; அத்தலைவனின் திருவடியின்பம் எங்கும் பொலிக!

திருமாலும் நான்முகனுந் தேர்ந்துணரா தன்றுங்
கருமால்உற அழலாய் நின்ற—பெருமான்

பிறவாதே தோன்றினான் காணாதே காண்பான்
துறவாதே யாக்கை துறந்தான்—முறைமையால்

ஆழாதே ஆழ்ந்தான் அகலா தகலியான்
ஊழால் உயராதே ஓங்கினான்—சூழொளிநூல்

ஓதா துணர்ந்தான் நுணுகாது நுண்ணியான்
யாதும் அணுகா தணுகியான்—ஆதி

அரியாகிக் காப்பான் அயனாய்ப் படைப்பான்
அரனாய் அழிப்பவன் தானே—பரனாய

தேவர் அறியாத தோற்றத்தான் தேவரைத்தான்
மேவிய வாறே விதித் தமைத்தான்.

(திருக்கயிலாய ஞான உலா.)

உலகத்தையும், பல அண்டங்களையும் தோற்றுவித்து ஆளும் தன்மை பூண்ட தலைவன் வீற்றிருக்கும் இடங்கள் எவை என்பவற்றை இனிக் காண்போம்.

தூய சிந்தையிலும், தெளிந்த அறிவிலும், பழுதற்ற சொற்களிலும், வாயாரப் பண்ணமைத்துப் பாடுகின்றோர் பாக்களிலும், தன்னினமான அடியார்களிடத்திலும், ஏழண்டங்களுக்கு அப்பாலும், செம்பொன்னிலும், புனத்

திடத்தேயும், நறுங்கொன்றைப் பூக்களிலும், மலையினிடையேயும், நெருப்பினிடையேயும், காற்றினிடையேயும், கயிலாயத்தின் உச்சியிலேயும் உள்ளான், உலகத்தைத் தோற்றுவித்து உயிர்களின் உள்ளத்தில் இன்ப நடம் புரியும் அண்ணல். இவைகளே அவன் வீற்றிருக்கை.

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கி னுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடும் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின் மேலான்
ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதி னுள்ளான்பொருப்
பிடையான் நெருப்பிடையான் காற்றி னுள்ளான்,
கனத் கத்தான் கயிலாயத் துச்சி யுள்ளான்
காளத்தி யானவனென் கண்ணு ளானே !

(திருக்காளத்தி - திருத்தாண்டகம்)

இதுகாறும் நாம் கண்டவர்கள் இருவகைப்பட்ட தலைவர்கள். முன்னவர் புற உலகை ஆள்பவர் ; பின்னவர் தானே மக்களைத் தோற்றி அக இருளைப் போக்கி, அக உலகை ஆளும் வேந்தர். முதற்றலைவன் பின்னவன். அவன் ஆட்டம் இன்றேல் உலக ஆட்டம் இன்றாம். அவன் ஆட்சி நிற்பின் அனைவரும் புகுதற்குப் புகலிடமே கிடையாது. சிறந்த முதற்றலைவன் எவன் ? தில்லையின்கண் திருநட்டம் பயின்றாடும் ஆடல் அழகனே அனைவர்க்கும் தலைவன் !

—

மதிப்புரை

" அழுந்தடி அடைந்த அன்பர் " :—முதுபெரும் புலவர், பெருஞ்சொல் விளக்கினர் திரு. அ. மு. சரவண முதலியார் அவர்களால் எழுதப் பெற்று, அவர்தம் அருமை மாணவர்கள் திரு. மு. பாலசுப்பிரமணியம், திரு. க. குமரவேல் என்பவர்களால், அரியலூர் மணிவாசக மன்றத்தின் சார்பில் வெளியிடப்பெற்றது. நூலாசிரியரின் நுண்மாண் நுழைபுலனையும், பரந்து விரிந்த புலமை நலனையும், சுவை பெருக்கும் சொல் வன்மையினையும், சீரிய நினைவாற்றலையும், சிவநெறி யுணர்வையும் புலங்கொள விளக்கும் சிறந்த கருவியாக இந்நூல் இலங்குகின்றது. திருவாசகத் தேன்கடலில் நெடுங்காலமாகத் திளைத்து இன்புற்றுள்ள ஆசிரியர் " நாயிற் கடையேன் " முதலிய தொடர்கட்குச் செய்தருளியிருக்கும் விளக்கங்கள் சுவை பயக்கின்றன. இங்ஙனமே " வன்பட்ட கூடலில் வான்பட்ட வையை " எனவரும் திருவருட்பாவினுக்கு விரித்துள்ள நயவுரைகள் கழிபேரின்பம் விளைக்கின்றன. இடையிடையே போதரும் தெரிந்தெடுத்த சிறந்த மேற்கோட் பாடல்களும், காந்தியடிகள் போன்ற சான்றோர் கருத்துரைகளும் அறிஞர்க்கு விருந்தாக அமைந்து நூலின் சுவையினை மிகுவிக்கின்றன. திருக்குறளைப்போல உலகப் பொதுநூலாகத் தகும் சிறப்புடைய திருவாசகம்பற்றி இத்தகைய ஆய்வுரைகள் மேலும் பலப்பல வெளிவருதல் வேண்டும். சிவநெறி யுணர்வுடையோர் அனைவரும் படித்துணர்தற்குரிய நல்ல நூல் இது. விலை ரூ. 1—8—0.

" அழுந்தடி தான்அடைந்த அன்பர் "தம் மாண்பை
விழுமிதின் ஆய்ந்து விரித்தார் !—தொழுதகைய
சான்றோராம் அ. மு. சரவணனார் ! அ. ச. ஞா.
தோன்றலின்நற் றந்தையார் ! சூழ்ந்து.

—முருகவேள்

கந்தரனுபூதி

மா. ப. தியாகன் B. A.

" நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர்
திருக்கோணமலை தலத்தாரு கோபுர
நிலைக்குள் வாயினில் கிளிபாடு பூதியில் வருவோனே !

என்ற திருப்புகழில் இவ்வனுபூதி கிளி ரூபமாக இருந்து பாடப்பெற்றது எனக் காண்கிறோம்.

" கந்தானுபூதி பெற்றுக் கந்தானுபூதி சொன்ன
எந்தையருள் நாடியிருக்கு நாளெந் நாளோ ?"

என்று தாயுமானவர் அருணகிரிநாதரை வியந்து கூறுகிறார் "மாறா அனுபூதி வாய்க்கினல்லால் என் மயக்கந் தேறு தென் செய்வேன் சிவமே பராபரமே" என்று அவரே மற்றோரிடத்தில் அனுபூதி வேண்டுமென்று பாடுகிறார்கள். மயக்கங் காரணமாக ஜீவனறிவு சிறுமை அடைந்துள்ள தாதலால், அது நீங்க வாலறிவை உணரும் ஆற்றலைச் சீவன் அடைதலையே அனுபூதியென்றும் கொள்ளலாம். அவ்வடைவே ஞானமுமாகும். அதற்கெனவே ஏற்படுத்தப் பட்டுள்ளன மனனம் பாராயணம் போன்ற சாதனைகள். பாராயணத்தால், பாராயணம் பண்ணப்படும் பாடலோ பதிகமோ எந்த நிலையினின்றும் பாடப்பட்டதோ அந்த அனுபவ நிலையை ஒவ்வொருவரும் அடையலாமென்பதே மனோதத்துவ ஆராய்ச்சியாளர்கள் கண்டதோருண்மை. எனவே அனுபூதி பெற்றுப் பாடிய இக் கந்தரனுபூதியைப் பாராயணம் செய்பவர்கள் அனுபூதி யெய்துவரென்பது திண்ணம்.

" கந்தரனு பூதி கற்றுணர்ந்தோர் தங்களுக்கு
வந்தவினை யத்தனையு மாயுமே—செந்தில்
திருத்தணியில் வாழ்முருகன் செங்கமலப் பாதங்
கருத்தணியில் வாழ்ந்திருப்பீர் காண் "

என்பது ஆன்றோர் வாக்கு.

" உரையற்ற தொன்றை உரைசெய்யு மூமர்காள்
கரையற்ற தொன்றைக் கரைகாண லாகுமே
திரையற்ற நீர்போல் சிந்தைதெளிந் தேற்குப்
புரையற் றிருந்தான் புரிசடை யோனே "

என்று திருமந்திரத்தில் சொல்லும் உண்மைக்கிணங்க உரையற்று - கரையற்று - திரையற்று - புரையற்றிருக்கும் ஒரு ஆனந்த அனுபவ நிலையே அனுபூதி நிலையாகும். ஆகையால் அறிவாற் காணும் பொருளால் இப் பாடல்களின் அனுபவத்தை அடைய முடியாது. "அறிவொன்றற நின்றறிவார்" "அறிவிற் பிறிவொன்றற நின்ற பிரானலையோ" என்று இக் கந்தரனுபூதியிலேயே கூறப் படுதலால் இப்பாடல்களின் மூலம் அனுபவமெய்திய அனுபூதிமான்கள் ஒவ்வொரு பாடலுக்கும் எந்திரமும், மூல மந்திரமும், அனுஷ்டிக்கும் முறைகளும் வகுத்துள்ளார்கள். அதேபோல் ஆதிசங்கரர் அருளிப்போந்த "சௌந் தர்ய லஹரி" என்னும் ஸ்லோகங்களுக்கு எந்திரங்களும் மூலமந்திரங்களும் வகுக்கப்பட்டுள்ளன. அவைகளின் உண்மைகளை அனுபவித் தறியவேண்டுமே யொழிய, ஆதார அளவைகளால் உய்த்துணர முடியாவாம். "கிளி பாடும் பூதியில் வருவோனே" என்று கூறியபடி, இவ்வநு பூதியில் மறைந்து விளங்கும் முருகன், இப் பாடல்களுக்கு அமைக்கப்பட்டுள்ள எந்திரமாகிய கோல்நட்டு மூலமந்திர மெனும் கயிறுகொண்டு மனனரூபமாய் முறுக வாங்கிக் கடைபவர்கட்கு முருகன் திருவுருக்கொண்டு முன் நிற்பன் என்பது ஆன்றோர் உறுதி.

காப்பு

நெஞ்சக் கனகல்லும் நெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமா லைசிறந் திடவே
பஞ்சக் கரஆனை பதம் பணிவாம்

நம் நெஞ்சம் கனத்த கல்லுக்கு ஒப்பிட்டுக் கூறப்படு கிறது. அதை நெகிழ்விக்கச் சண்முகப்பெருமான், தம்மைத்

தஞ்சமென்றடைவோர்க்கு, அருள் பாலிக்கிறார் என்பது "நெஞ்சக் கனகல்லும் நெகிழ்ந்துருகத் தஞ்சத்தருள் சண்முகன்" என்ற தொடரால் உணர்த்தப் படுகிறது. மணிவாசகப்பெருமான் "கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன் கருணை வெள்ளத் தழுத்திவினை கடிந்த வேதியனை" என்று கூறுகிறார். நம் மனம் நானெனும் ஆணவத்தால் தடிப்புண்டு கனத்த கல்லாய்ச் சமைந்துள்ளது. அத்தன்மையால் பிறப்பிறப்பென்னும் அலைகளால் மொத்துண்டு "தள்ளாடி வாடிப் பதைக்கின்றது." அந்த நிலையில் எல்லாம் அவன் செயலென்று தன்னை முருகன்பால் செலுத்தச் செலுத்தத் தஞ்சமென்றடைந்த மனம் தேய்ந்து தேய்ந்து பஞ்சினும் மெல்லிதாகி நெகிழ்வடைகிறது. நெகிழ்ந்த நிலையில் மனத்திற்கு ஓய்வு ஏற்படுகிறது. ஓய்வேற்படவே அமைதியும் ஆனந்தமும் உண்டாம். ஆனந்த நிலையில் மனம் என்ன செய்யக்கூடும்? பாடும். பாடிக் களிக்கும். அப்படிப் பாடிய பாமாலை இக் கந்தரனுபூதி. அது சிறப்பாக அமைய வேண்டுமென்பதே இக் காப்புச் செய்யுளின் வேண்டுகோள் ஆகும். காப்பளிக்க, பஞ்சக்கர ஆனை பதம் பணிவாம்" என்று கூறுகிறார்.

"செஞ் சொற்புனை மாலை" என்று கூறுவதால் இப்பாடல்களில் சேர்க்கப்பட்ட சொற்கள் செம்மை வாய்ந்தன; அதாவது நலம் செய்யும் ஆற்றல் வாய்ந்தவை. ஏனெனில் அனுபூதி பெற்று முருகனருளால் அருணகிரி நாதருடைய உள்ளத்தெழும் சொற்களானபடியினால் அவைகள் செஞ் சொற்களேயாகும். நன்மையையே பயப்பனவுமாகும்.

மதயானை அனுசரிக்க

ஆடும் பரிவேல் அணிசேவ லெனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியானை சகோ தரனே

இப் பாடலுக்கு மதயானை அனுசரிக்க என்ற தலைப்பைக் கொடுத்துள்ளதன் காரணம், இதை மூலமந்திரத்

துடன் முறையே எந்திரத்துடன் மனனம் செய்வர்களுக்கு அத்திமுகத் தண்ணலின் அருளும் அருளுருவத் தரிசனமும் கிடைக்குமென்ற அனுபவங்கொண்டு இட்ட தலைப்பாக இருக்க வேண்டும். பின்வரும் அனுபவ வரலாற்றினால் இவ்வுண்மை புலனாகும்.

"எட்வர்ட் ஜேம்ஸ்" (Edward James) என்பவர் தான் செய்யும் தேவி உபாசனைக்கு இடையூறுகள் பல நிகழ்கின்றனவென்றும் அதைத் தடுக்க உபாயம் வேண்டுமென்றும் எழுதியிருந்தார். அதற்குபாயமாக விநாயகருடைய வழிபாடு வேண்டுமென்றும் வழிபடுவதற்கு, இப் பாடலை மூலமந்திரத்துடனும் எந்திரத்துடனும் மனனம் செய்ய வேண்டுமென்றும் பதிலளிக்கப்பட்டது. அவ்விதமே அவர் அனுசந்தித்துத் தாம் பெற்ற அனுபவத்தை எழுதியுள்ளார்கள்.

"தான் தியானத் திருந்த சமயம் அந்த அறையில் யானைகள் புடைசூழ ஒரு பெரியவர் வெள்ளாடையணிந்து கொண்டு கையில் ஒரு கமண்டலத்தில் நீர் ஏந்திக்கொண்டு வந்து தனக்கும் தம்பக்கலில் தியானம் செய்து கொண்டிருந்த மனைவிக்கும் வாயில் ஊற்றினராம்." பிறகு ஒளி வடிவில் அவை யாவும் மறைந்தனவாம். அந்தக் காட்சிக்குப் பின் தான் புத்துணர்ச்சி பெற்றதாகவும் இடையூறின்றித் தேவி உபாசனை செய்வதாகவும் தெரிவித்துள்ளார்.

தமிழ்மொழி படியாத ஒருவர் இப் பாடலின் மனனத்தால் மூன்று மாதத்தில் இவ்வனுபவம் பெற்றாரெனின் தமிழ் மக்கள் ஏன் பெறலாகாது ?

(தொடரும்)

——

மகோத்ஸவம்*

உத்ஸவம் என்பது உயர்ந்த சிருஷ்டி எனப் பொருள் படும். இறைவன் உயிர்களாகிய நம் பொருட்டுச் சிருஷ்டியை மேற்கொள்ளுகிறான். அந்நிலையையே நாம் உத்ஸவம் என்கிறோம். அவ்வுத்ஸவம் நம் பொருட்டு நிகழ்வதால் முதலில்நாம் யார் என்பதை ஆராய வேண்டும்.

உடலும் உயிரும்

நான் என்ற பதம் உடலைக் குறிப்பதாகவே சாதாரண மனிதன் எண்ணுகிறான். என் உடம்பு என்னும்போது உடல் வேறாகவும், உயிர் வேறாகவும் காணப்படுகிறது. இன்னும் சிறிது ஆராய்ந்து சென்றால் நான் என்னும் பதம் உடல் உயிர் முதலிய இரண்டையும் குறிக்கும் பதம் அன்று என்பது தெளிவாகும். பின்னர் அஃது எதைக் குறிக்கிறது? நம் உயிருக்கு உயிராயுள்ள இறைவனையே அது குறிக்கிறது.

உலகத்தைப் பார்க்க வொட்டாது நம்மை ஒன்று மறைத்துக் கொண்டிருக்கிறது. உடலில் உயிர் இருந்தாலும் கண் இல்லாவிட்டால் உலகத்தைக் காண முடியாது. அக் கண் போன்றது கலை. கலையை விளக்கம் என்னலாம். உயிரும் உடலும் கலையோடு கூடாவிட்டால் அறிவு விளக்கம் பெறாது. இதற்கு உதாரணமாக மணியோசையைக் கூறலாம். நாக்கையும் மணியையும் ஒன்று சேர்ப்பதால் மட்டும் ஓசை உண்டாகாது. அம் மணிக்கும் நமக்கும் இடையில் ஆகாயம் இருந்தாலொழிய அவ்வோசை நம் காதுக்கு எட்டாது. இவ்வாகாயம் போன்றது கலை. இம் மூன்றையும் ஒன்று சேர்த்து வைப்பவன் எவனோ அவனே கடவுள். அதனாலேயே அவனது பேராற்றலும் கருணையும் விளங்குகின்றன. உடலும் உயிரும் கூடாத நிலைக்குக் கேவல நிலை என்று பெயர்.

பொன்மேல் மை இருந்தால் பொன்னில் பிரகாசம் உண்டாகாது. பொன்னின் பிரகாசத்தை மை மறைத்து நிற்கும். அதுபோன்று நம்மிடத்துள்ள அறிவோடு அறி

---

*ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் திருமயிலையில் 28-4-37ல் நிகழ்த்திய சொற்பொழிவு. திரு. நே. த. கிருஷ்ணசாமி முதலியார் B.A., B.T., அவர்கள் கைக் குறிப்பு.

யாமையும் கலந்து இருப்பதால் அறிவு விளக்கம் பெறுவ தில்லை. அரிசி வேறு ; தவிடு, உமி முதலியன வேறு. ஒன்று சேர்ந்த இவற்றைப் பிரிக்க முயற்சி வேண்டும். நெல்லைப் பல தடவை குத்தக் குத்த அரிசியாதல்போல் பல தடவை முயன்றாலேயே அறிவினின்றும் அறியாமை நீங்கும்.

கடவுள்

நம்மிடமுள்ள அறியாமையை நீக்க முடியாத ஒரு நிலைமை நமக்குண்டு. அதற்கு ஆவாரகநிலை என்று பெயர். இந்நிலை விடயம் சொரூபம் என இருவகைப்படும். அவ்வறி யாமையை நீக்கிக் கொள்ள நாம் முயல்வதில்லை. அதை நீக்கக் கடவுள் தானாகவே நம்மிடம் வருகிறான் ; பிறக் கும்போது நமக்குப் பரிசுத்தமாகிய உடலைத் தருகிறான். கடவுள் தந்த அவ்வுடலைக் கடவுளுடைய தென்னாது நாம் நம்முடையதென்று கூறுகிறோம். இவ்வுடலை நமக்குத் தந்த கடவுளின் தயையையும் நாம் மறந்து விடுகிறோம்.

மலங்கள்

நம்மிடத்துள்ள ஆணவம், கன்மம், மாயை முதலிய குற்றங்களைப் போக்கிக் கொள்ளப் பெரியோர் சில முறை களை வகுத்துள்ளார். அவற்றை ஆராய்ந்த பிறகே அம் முறைகளை அனுஷ்டிப்பேனென்பது மடமை. நாம் நோய் வாய்ப்பட்டிருக்கும்போது வைத்தியர் மருந்து தருகிறார். மருந்தின் உட்பொருளை ஆராய்ந்த பிறகே நான் அதை உண்பேனென்றல் மடமை யாகாதோ ? முயலவேண்டுவது நமது கடமை. பலனை நல்குவது ஆண்டவன் கடமை. அப் பலன் எப்போது வருமென்று கூறுதலும் கடினம். இப் பிறவியிலேயே பெற்றாலும் பெறலாம் ; இன்றேல் அடுத்த பிறவியில் பெறலாம். முயற்சி வீணாகாது.

நம்மிடத்து ஆணவம் எது வரையில் உண்டோ அது வரையில் நமக்குப் பிறவி உண்டு. குற்றம் செய்த பிள்ளை யைத் தண்டித்துப் பிதா அவனை அணைப்பது போல நமது பாவ புண்ணியத்துக்கேற்ற பலனைத் தந்து மரணத்துக்குப் பின் நம்மைக் கடவுள் தன்னிடத்து ஒடுக்கிக் கொள்கிறான். குழந்தைகள் பொருட்டுத் தாயார் மருந்து சாப்பிடுவதைப் போல ஆன்மாக்களாகிய நமது இடர் தீரும் வண்ணம், நமது பிரம மாதவாகிய பராசத்தி ஆண்டவனை நோக்கி

மகா சிவராத்திரி அன்று பூசிக்கிருள். தனக்கென உழைப்பவன் சிறியவன்; பிறர்க்கென உழைப்பவன் பெரியவன். கடவுள் பெரியவனுதலைக் காண்க.

பஞ்ச கிருத்தியம்

நம்மிடத்துள்ள ஆணவமல பரிபாகத்திற்குச் 'சிருஷ்டியையும், மாயா மல பரிபாகத்திற்கு ஸ்திதியையும், கன்ம மல பரிபாகத்திற்குச் சம்ஹாரத்தையும் ஆண்டவன் மேற்கொள்கிருன். இம்மூன்ருேடு திரோபவத்தையும், அனுக்கிரகத்தையும் கூட்டப் பஞ்ச கிருத்தியமாகிறது. இப் பஞ்ச கிருத்தியத்தை உயிர்களின் நன்மைக்காகவே ஆண்டவன் செய்கிருன்.

ஆத்ம வாதிகள்

நமது உயிரைப் பலர் பலவிதமாகக் கூறுவர்.

1. சிலர் ஆத்மா அல்லது உயிர் என்பது ஒன்றில்லை என்பர். அவர் சூன்யாத்மவாதிகள்.

2. சிலர் தேகமே ஆத்மா என்பர். அவர்கள் தேகாத்மவாதிகள்.

3. நம்மிடத்துள்ள ஐந்து இந்திரியங்களே உயிர் என்பர் சிலர். சில சமயங்களில் இவ்வைந்து இந்திரியங்களும் ஒன்று சேர்வதில்லை. அதனுல் இந்திரியத்தை உயிர் என்பது தவறு. இவ்வாறு இந்திரியமே உயிர் என்போர் இந்திரிய ஆத்மவாதிகள்.

4. சூக்கும தேக ஆத்மவாதி சரீரத்துக்குள் உள்ள சரீரமே உயிர் என்பன். அது சூக்குமம் காரணம் என இரு வகைப்படும். சூக்கும தேகம் சத்தாதி ஐந்தும் மனம் புத்தி அகங்காரம் என மூன்றும் ஆகிய எட்டால் ஆகியது. அது சொப்பனமாகிய கனவு நிகழ்ச்சிகளை அறியும். ஆயினும் அக்கனவு நிகழ்ச்சிகள் பின்னர் மறக்கப்படுதலின் சூக்கும தேகமே ஆன்மா என்பது பொருந்தவில்லை.

5. பிராணுத்மவாதி நம்முள் உள்ள பிராணவாயுவே உயிர் என்பான்.

6. பிரமாத்மவாதி அறிவாகிய பிரமமே உயிர் என்கிருன். ஆனுல் உயிர் அறியாமை வயப்பட்டுள்ளது.

7. சமூகாத்மவாதி உடம்பு முதலிய அனைத்தும் கூடிய சமுதாயம் அல்லது கூட்டமே உயிர் என்கிருன். யாவும்

கூடிய வழியும், அவை தனித்தனி வெவ்வேறு பெயர் பெறுகின்றனவே யன்றி ஆத்மா எனப்படுதல் இல்லை. மேலும் அவை யனைத்தும் மாயையின் காரியங்களேயாம்.

8. அந்தக்கரண ஆத்மவாதி மனம், சித்தம், புத்தி, அகங்காரம் முதலியவையே உயிர் என்கிறான். இவற்றில் ஒன்று செய்யும் காரியத்தை இன்னொன்று செய்வதில்லை. எனவே இவர்தம் கூற்றும் பொய்யாகிறது.

சிவஞான சித்தியாரின் மூன்றாஞ் சூத்திரம் உயிரைப் பற்றிக் கூறுகிறது. அது வருமாறு :—

"உயிரெனப் படுவதிந்த வுடலின்வே றுளதாயுற்றுச்
செயிருறு மிச்சாஞானச் செய்திக ளுடையதாகிப்
பயில்வுறு மின்பதுன்பப் பலன்களுநுகரும் பார்க்கிற்
றுயிலொடு மைந்தவத்தைப் படுமுண்மை துரியாதீதம்."

பஞ்ச கிருத்தியம் நடைபெறுதல்

அரசனுக்கு மந்திரி யில்லாவிட்டால் பிரயோசனம் இல்லை. உள்ளம் மந்திரி ; உயிர் அரசன். உள்ளம் இல்லா விட்டால் உயிர் இயங்காது. அரசனைச் சூழ்ந்து பலர் இருப்பர் ; அவர்களுக்குள் படிப்படியாக ஏற்றத் தாழ்வு உண்டு. அதுபோல உயிரைச் சுற்றி ஐந்து அவத்தைகள் இருக்கின்றன. அவற்றில் மூன்று காணப்படுவன; இரண்டு காணப்படாதன. விழிப்பு, கனவு, தூக்கம் ஆகிய மூன்றும் காணப்படுவன. துரியம் துரியாதீதம் என்பன காணப் படாதன. நன்றாகத் தூங்கும் நிலை துரிய நிலை ; சுகமாகத் தூங்கும் நிலை துரியாதீத நிலை. இவ்வைந்து அவத்தை களோடு மும்மலங்களும் உயிரைச் சூழ்ந்து நிற்கின்றன. இவற்றால் உயிர்படும் கஷ்டங்கள் எண்ணில. இத்துன்பத் தைக் கண்டு ஆண்டவன் தயையுடையவனாகிறான் : உயிரின் கஷ்டத்தைப் போக்க உயிரை நோக்கி வருகிறான். அப்படி வரும் நிலையிலேயே பஞ்ச கிருத்தியங்கள் நடைபெறு கின்றன. இதையே மணிவாசகனார் திருவெம்பாவையில்,

"போற்றி யருளுக நின்னாதியாம் பாதமலர்
போற்றி யருளுக நின்னந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றி யெல்லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி யெல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்

போற்றியெல்லா வுயிர்க்கு மீறா மிணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய் !'

என்னும் பாட்டில் கூறுகிறார். இவ்வாறு ஆண்டவன் வரும் கோலத்தையே உத்ஸவம் என்கிறோம். இவ்வுண்மை,

" ஆர்த்த பிறவித் துயர்கெடநா மார்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமு மெல்லோமுங்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைக
ளார்ப்பரவஞ் செய்ய வணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாத
மேத்தி யிருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய்

என்னும் திருப்பாடலாலும் மணிவாசகனார் விளக்குகிறார்.

உத்ஸவம்

இனி தற்கால உத்ஸவங்களில் இப்பஞ்ச கிருத்தியங்களும் நடைபெறுகின்றனவா வென்பதைக் காண்போம். செய்கைகளில் இருவிதம் உண்டு. ஒன்று ஆத்மார்த்தம். மற்றொன்று பரமார்த்தம். தன் ஆத்மாவின் உயர்வுக்காகச் செய்யும் முயற்சி ஆத்மார்த்தத்தின் பாற்படும். பிறர் நன்மைக்காகச் செய்தல் பரமார்த்தமாகும். ஆண்டவனுடைய பஞ்சகிருத்தியம் பரமார்த்தத்தின் பாற்பட்டதே.

உத்ஸவத்தில் முக்கிய அம்சங்கள் நான்கு. அவை பூசோதனை, பிரதிட்டை, பூசை செய்தல், பிராயச்சித்தம் என்பன. இவற்றில் பூசை மூன்று வகைப்படும். அவை நித்திய பூசை, நைமித்திக பூசை, காமிக பூசை எனப்படும். முதல் இரண்டு பூசைகளும் பொதுவாகச் செய்யப்படுபவை.

உத்ஸவத்துக்குத் தமிழில் சிறப்பு என்று பெயர். திருக்குறளிலும் திருவள்ளுவர்,

" சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு "

என்று கூறியிருத்தல் காண்க. சிறப்பு என்பதற்கு விழவு என்று பரிமேலழகர் பொருள் கூறினார். நித்தியத்தின்

தாழ்வு தீரச் செய்வதே நைமித்திக பூசை என்று அவர் கூறுகிறார். பஞ்சபர்வம் என்பது மாத உத்ஸவம். பஞ்ச கிருத்தியமாக உத்ஸவம் செய்வதே சிறப்பு.

அங்கங்கள்

உத்ஸவத்தில் பதினெட்டு செயல்கள் நிகழ்கின்றன. அவை வருமாறு :—(1) ரிஷப பூசை. இது விருஷப யாகம் என்றும் கூறப்படும். (2) கொடியேற்றல். (3) பிரஹத் தானம். (4) மிருத்சங்க்ரஹணம், மண்கொண்டு வருதல் ; விதை போடுதல் ; அவை முளைத்தல் முதலிய சிறப்புக்கள். (5) யாகசாலை. (6) அஸ்திரம். இதற்கு ஆறு அங்கம் என்று பெயர் ; ஷடாங்க மந்திரம் என்றும் கூறப்படும். இப் பூசையில் அங்கங்களைத் தொட்டுப் பார்த்தல் விரோத மின்மையைக் காட்டுகிறது. அதுபோது சிறிய மேளம் உபயோகிக்கப்படும். (7) பலிதானம், பிண்டம் போடுதல் (8) யானக் கிரமம். இது வாகனக்கிரமம் என்றும் கூறப் படும். (9) பரிவேடம். (10) நிராதனை. இதை ஆலத்தி என்றும் கூறுவர். (11) கௌஸ்துபம். இது சந்தோஷத்தைக் குறிப் பது. (12) தீர்த்த சங்கிரஹணம். இது நீர் கொண்டுவரல் எனப்படும். (13) சூர்ணோத்ஸவம். இதற்குப் பொற்சுண்ண விழா என்று பெயர். இவ்விழாவில் வாசனைப் பொடிகள் உபயோகிக்கப்படும். (14) தீர்த்தம். (15) அவரோகணம் (கொடியிறங்கல்). ருக்என்ற பதத்துக்கே வளர்த்தல் என்று பொருள். (16) ஸ்தாபனம் (தனியாகப் பூசித்தல்). (17) விவாகம். (18) அடியார்களைப் பூசித்தல்.

உத்ஸவத்தில் பஞ்சகிருத்தியம்

பொதுவாக அங்குரம், துவஜாரோகணம் முதலியன சிருஷ்டியின் பாற்படும். வாகனம், ப்லி முதலியன ஸ்திதி. ரதோத்ஸவம் சங்காரம். மௌன உத்ஸவம் திரோதானம். இது அகாலத்தில் செய்வது. ஊடல் உத்ஸவம் அனுக்கிர கத்தின் பாற்படும். ஊடல் விரோதமன்று.

> " ஊடுதல் காமத்திற் கின்பமதற் கின்பங்
> கூடி முயங்கப் பெறின் "

என்று திருவள்ளுவனார் கூறுகிறார். ' கலவி வித்தக ஊடி ' என்பது திருவிளையாடற் புராணம். சக்தி ஊடல் அனுக்கிர

கத்தின் பாற்பாட்டது. விசேஷ ஞானத்தையே சொரூப மாக உடைய மாதாவுக்குச் சக்தி என்று பெயர். ஈஸ்வரன் வழிஉமை நிற்பள். சக்தியும் சிவமும் கூடினல் உயிர்களுக்கு இன்பம் உண்டாகும்.

வெள்ளிக்கிழமை தோறும் சுற்றி வருவது பராசக்தி. மூலஸ்தானத்தில் இருப்பது ஆதிசக்தி. சர்வேசுரனே சிருஷ்டி காரணமாகச் சக்தியாகிருன். சிவம் என்பதே உண்மை உருவம். சிவம் என்பது தொழிற் பெயர். அவன் நம்மோடு கூடும்போது அவனுக்குப் பதி என்று பெயர். இதை விளக்குவது சித்தியாரின் இரண்டாஞ் சூத்திரம்.

முன் காலத்தில் எல்லா ஊர்களிலும் விழாக்கள் நடந் தன. இது திருமுருகாற்றுப் படையிலுள்ள "ஊர் ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்" என்ற அடியால் விளங்கு கிறது. ஊர் ஊர் என்பதற்கு ஒவ்வொரு ஊர் என்று பரிமேலழகர் பொருள் கூறினர். அதனல் ஒவ்வொரு ஊரிலும் விழா உண்டு என்பது ஏற்படுகிறது.

அறுவகை விழா

அவ்விழா அறுவகையாகக் கொண்டாடப்பட்டது. நாட்களிலும் வித்யாசம் உண்டு. ஒரு நாள் உற்சவமும் உண்டு. இஃது அரசனின் நன்மை கருதிச் செய்வது. மூன்றுநாள் விழா சாத்விகமானது; சிவனைச் சந்தோஷிப் பது. ஐந்து நாள் விழா பாத்திபம் என்பது. இது போகத்தை உண்டாக்குவது. ஏழு நாள் உற்சவம் ஸ்ரீகரம். இதைச் சிவப்பிரியம் என்றும் கூறலாம். ஒன்பது நாள் உத்ஸவம் சௌக்கியம் என்னப்படும். அது சாந்தத்தைக் குறிப்பது. பன்னிரண்டு நாள் உத்ஸவம் பைத்ரிகம். இது முக்தியின் பயனைக் குறிப்பது. இந்நாட்களின் வித்தி யாசமே அறுவகை உத்ஸவம் என்னப்படும்.

திருவாரூர் போன்ற இடங்களில் இருபத்தொரு நாட் கள் வரை விழா நடைபெறுகிறது. திருப்பெருந்துறைப் புராணத்தில் புரூரவன் ஏழு நாள் விழா செய்ததாகக் கூறப் பட்டிருக்கிறது.

உத்ஸவத்தின் பயன்

இனி உத்ஸவத்தின் பயனைக் காணல் வேண்டும். உத்ஸவ காலத்தில் எல்லாரும் ஒருவித வித்தியாசமுமின்றிக்

கடவுளைத் தரிசிக்கலாம். ஜாதிப்பேய் அங்குத் தலை காட்டாது. இதைச் சேக்கிழார் பெருமான் நமிநந்தியடிகள் புராணத்தில்,

"தேவர் பெருமா னெழுச்சி திருமணலிக் கொருநா ளெழுந்தருள
யாவரென் னுதுடன் சேவித் தெல்லாக் குலத்தி லுள்ளோரும்
மேவ வன்பர் தாமுமுடன் சேவித் தணைந்து விண்ணவர்தங்
காவ லாளர் ஓலக்க மங்கே கண்டு களிப்புற்றார்"

என்ற செய்யுளில் கூறியிருக்கிறார்.

தரிசனம் செய்யும் முறை

எவ்வாறு தரிசனம் செய்ய வேண்டுமென்பதையும் கூறுதல் அவசியம். "ஆள் அடையாளத்திற்குத் திருநீறிட்டுச் செல். விபூதியைக் கைநழுவ விடாதே" யென்று தைத்திரியோப நிஷத் கூறுகிறது. வியாஸ பாரதத்தில் விபூதியைப் பற்றிக் கூறியிருக்கிறது. ஒரு சமயத்தில் பார்வதிக்கும் பரமசிவனுக்கும் ஒரு சம்பாஷணை நடந்தது. அதுபோது பரமசிவனார் "விபூதி என்னாலே அடியார்களுக்குக் கொடுக்கப்பட்டது" என்று கூறுகிறார். பதின்மூன்று உபநிஷத்துக்களில் விபூதியைப் பற்றிக் கூறியிருக்கிறது. பூதி எனபதற்கு ஐஸ்வரியம் என்று பொருள். பிரமசாரிகளும் விபூதியை அணிதல் வேண்டுமென்று போதாயன சூத்திரம் கூறுகிறது. உத்ஸவத்துக்குச் செல்லும்போது சிறப்புப் பொருந்திய விபூதியை அணிந்து செல்லல் வேண்டும்.

இரண்டாவதாக உருத்திராக்கத்தை அணிந்து செல்லல் அவசியம். உருத்திராக்கத்திற்குக் கண்மணி என்று வேறு பொருள் உண்டு. தற்கால அறிஞர்களும் உருத்திராக்கத்தில் வியாதியைத் தீர்க்கும் குணம் இருப்பதாகக் கூறுகிறார்கள். பதின்மூன்று வருஷங்களுக்கு முன் கள்ளிக்கோட்டையில் ஒருவருக்கு உருத்திராக்கம் இழைத்துக் கொடுக்கப்பட்டதாம். அவரைப் பீடித்திருந்த தீராத நோயொன்று தீர்ந்துவிட்டதாம். எனவே விபூதி உருத்திராக்கத்தோடு விழா நாட்களில் ஆண்டவனை வணங்கினால் நாம் பெரும்பேறு பெறலாம்.